சார்பு நீதிமன்றம், பெருந்துறை
OS 236/2022

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் நாள் DW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 20.02.2026

**Dw1 (தெய்வசிகமாணி)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்)**

எனது ஊர் வாய்பாடிக்கும் சென்னிமலைக்கும் இடையே சுமார் 20 கி மீட்டர் தூரம் இருக்கும். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதை தெரிந்து கொண்டேன். எனக்கு பணம் கொடுத்திருப்பதாக வழக்கு போட்டுள்ளார். பதிலறிவிப்பு, எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணை சங்கதிகள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. வழக்கு கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் எனது இல்லை என எதன் அடிப்படையில் மறுக்கிறேன் என்றால் நான் ஆவணத்தின் நகல் பார்த்த பின்பு அது எனது கையொப்பம் இல்லை என்பதை தெரிந்து கொண்டேன். 2022 ம் ஆண்டு நகல் எடுத்துப் பார்த்தேன். கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல என்பதை காட்டுவதற்கு நான்அதை கையெழுத்து நிபுணரின் பரிசோதணைக்கு உட்படுத்த நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் எனது கையொப்பம் இல்லை என்பதால் எடுக்கவில்லை. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது என்பதால் தான் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரை விவரங்களுக்கு முரணாக முதல் விசாரணை சாட்சியம் தாக்கல் செய்யதுள்ளதால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதிக்கும் எனக்கும் வரவு செலவு இருந்தது என்றும் பழக்கம் இருந்தது என்றும் அதன் அடிப்படையில் தான் வாதி எனக்கு பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. வாதி எனது கையொப்பத்தை மோசடி செய்துள்ளார் என குற்றவியல் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் எடுக்கவில்லை. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது என்பதால் தான் நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு விசாரணைக்கு வந்த பின் வாதி எந்த ஊரை சேர்ந்தவர் என்பது குறித்து அவரது விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் விசாரணைக்கு பின் தெரிந்து கொண்டேன், அதற்கு முன்பு தெரியாது. நான் யார் மூலம் விசாரித்தேன் என்றால் பெயர் எனக்கு ஞாபகமிலலை.

பக்கத்தில் இருந்தவர்களை விசாரித்தேன். வாதி எனக்கு தெரிந்தவர் என்பதால் தான் அவரை குறித்து நான் எவ்வித விசாரணையும் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா கடனுறுதி சீட்டு என்னால் சாட்சிகள் முன்னிலையில் வாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன் என்றும் வாதி தாவாவில் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப நடவடிக்கை எதுவும் எடுக்க உள்ளேனா என்றால் எனது கையொப்பம் இல்லை என்பதால் அதற்கு அவசியமில்லை. நான் பொய்யாக எதிர்வழக்காடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல என்பதை காட்ட வேறு சாட்சிகளை விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணை சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED — Digitally signed by M ASHFAQ AHAMED Date: 2026.02.20 17:32:57 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS